## இராசிபுரம் நகராட்சி

## நகர்மன்ற சாதாரணக் கூட்ட அறிவிப்பு

2022–ஆம் வருடம் செப்டம்பர் மாதம் 05–ஆம் தேதி திங்கட்கிழமை பிற்பகல் 05.00 மணிக்கு இராசிபுரம் நகராட்சியின் சாதாரணக் கூட்டம் ஒன்று நகர்மன்ற கூட்ட அரங்கில் நடைபெறவுள்ளது.

அதுசமயம் கீழ்க்கண்டப் பொருள்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

இராசிபுரம் நகராட்சி
நாள் : 29.08.2022

தலைவர்,
நகர் மன்றம்.

### பொருள்கள்

(1) இராசிபுரம் நகராட்சி சேலம் சாலையில் மினி உயர் கோபுர விளக்கு கம்பம் உள்ளது. தற்போது இதன் கீழே அமைக்கப்பட்டுள்ள கான்கிரீட் பழுதடைந்து கம்பம் விழும் தருவாயில் உள்ளது. தற்போது மழைக்காலம் ஆரம்பமாகிவிட்டதால் பணியின் அவசர அவசியம் கருதி தோராய மதிப்பு ரூ. 3000/–இல் கம்பத்தின்கீழ் கான்கிரீட் அமைக்க, நகர் மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று ஒப்படைப்பு பணியாக செய்ததற்கு மன்றத்தின் அங்கீகாரம் வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :** மன்றம் அங்கீகரிக்கலாம்.

(3472/22/இ2)

**தீர்மானம் எண். 143**

அங்கீகரிக்கலாம்.

(2) இராசிபுரம் நகராட்சியில் TNSUDP – SQM அவர்களின் சாலை பரிசோதனை பணிக்காக CORE CUTTER WITH DOLLY - MACHINE பணியின் அவசர அவசியம் கருதி ரூ. 4130/–ற்கு பொருத்துநரால் வாங்கப்பட்டது. நகர் மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பொருத்துநர் திரு ம. ஸ்ரீதர் அவர்கள் தொகை வழங்கியதற்கு மன்றத்தின் அங்கீகாரம் வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

அ) மன்றம் அங்கீகரிக்கலாம்.

ஆ) பொருத்துநர் திரு ம. ஸ்ரீதர் அவர்களுக்கு நகர் மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று வருவாய் நிதியிலிருந்து தொகை வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

(1335/22/இ2)

**தீர்மானம் எண். 144**

அங்கீகரிக்கலாம்.

(3) இராசிபுரம் நகராட்சியின் மாண்புமிகு தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்களது அரசின் ஓராண்டு சாதனை விவரங்களை மாலை தமிழகம் (ஆங்கிலம்) மலரில் வெளியிட்டதற்கான விளம்பரக் கட்டணம் ரூ. 12600/– செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

**(1337/22/இ1)**

**தீர்மானம் எண். 145**

அனுமதிக்கப்பட்டது.

(4) இந்நகராட்சிக்கு எழுதுபொருட்கள், ஈரோடு மாவட்ட பெண்கள் எழுதுபொருட்கள் அச்சுக்கூட மற்றும் தையல் தொழிலாளர்கள் தொழிற்கூட்டுறவு சங்கம் லிமிடெட் தங்கள் நிறுவனம் மூலம் எழுதுபொருட்கள், கணினி உபகரணங்கள், படிவங்கள் மற்றும் புத்தகங்கள் மிக சிறந்த முறையில் தரமாக விற்பனை செய்வதால் ஆர்டர் வழங்க கோரி 02.08.2022 அன்று கடிதம் எங்களுக்கு வரப்பெற்றுள்ளது.

மேற்படி நிறுவனத்தில் வறுமை கோட்டிற்கு கீழ் வாழும் பெண்கள் விதவைகள், ஆதரவற்றோர் ஆகிய மகளீர்களை உறுப்பினர்களாக சேர்த்து வேலை வாய்ப்பு அளித்து வருவதால், இந்த சங்கத்தில் அரசு துறைகளும் மற்றும் அரசை சார்ந்த முறை நிறுவனங்களும் விலைப்புள்ளி கோராமல் நேரடியாக கொள்முதல் செய்ய தமிழ்நாடு அரசாணை எண். 283, நாள் 18.06.1998—இல் ஆணை பிறப்பித்துள்ளது.

இந்நகராட்சிக்கு எழுது பொருட்கள், பதிவேடுகள், சேவை மையத்திற்குத் தேவையான படிவங்கள் மற்றும் சொத்துவரி, குடிநீர் வரி, ரசீதுகள் அரசாணை எண். 283 நாள் 18.06.1998—இன்படி மேற்படி நிறுவனமான ஈரோடு மாவட்ட பெண்கள் எழுதுபொருட்கள் அச்சுக்கூட மற்றும் தையல் தொழிலாளர்கள் தொழிற்கூட்டுறவு சங்கம் லிமிடெட் அவர்களிடமிருந்து நேரடியாக கொள்முதல் செய்யவும், பணியாணை வழங்கவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** 1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்படி செலவுத் தொகையை நகராட்சி பொது நிதியிலிருந்து செலவு செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

**(101/21/பி3)**

**தீர்மானம் எண். 146**

அனுமதிக்கப்பட்டது.

(5) இந்நகராட்சிக்குச் சொந்தமான வ.வு.சி நகர் 1000 அடி ஆழ்துளை கிணற்றின் 10 எச்பி நீர்முழ்கி மோட்டார் panal Board பழுதடைந்து பொதுமக்களுக்கும் பொது கழிப்பிடத்திற்கும் தண்ணீர் வழங்க முடியாமல் உள்ளது. புதியதாக வாங்கி பொருத்தி தண்ணர் வசதி செய்ய ரூ.22500/—க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

மன்றம் அனுமதிக்கலாம். மேலும், செலவினத்தை நகராட்சி குடிநீர் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(2994/22/இ2)

**தீர்மானம் எண். 147**

அனுமதிக்கப்பட்டது.

(6) இராசிபுரம் நகராட்சியில் கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம் 2022—23—இன்கீழ் சேதமடைந்துள்ள 4,916 கி. மீட்டர் மண் சாலைகளை தார்சாலைகளாக மாற்றம் செய்ய ரூ. 537.10 இலட்சத்திற்கு மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டுள்ளது.

| S.no | Name of the Road | Unicode | Bus Route/ Others | Length in KM | Width in M |
|---|---|---|---|---|---|
| 1 | Kattanachampatti block main road cross 1(E-W) | 053002R029 | Others | 0.244 | 5.50 |
| 2 | Kattanachampatti block main road cross 5 | 053002R031 | Others | 0.101 | 5.50 |
| 3 | Ramasamy Thottam East | 053005R109 | Others | 0.186 | 7.50 |
| 4 | Ramasamy Thottam cross - 1 | 053005R112 | Others | 0.210 | 5.50 |
| 5 | Ramasamy Thottam cross - 2 | 053005R113 | Others | 0.260 | 5.50 |
| 6 | Ramasamy Thottam cross - 3 | 053005R114 | Others | 0.220 | 6.00 |
| 7 | Ramasamy Thottam cross - 4 | 053005R115 | Others | 0.230 | 6.00 |
| 8 | Kattur Kattukottai cross 1 | 053019R298 | Others | 0.150 | 5.50 |
| 9 | Kattur Kattukottai cross 2 | 053019R299 | Others | 0.145 | 5.50 |
| 10 | Nainamalai Layout | 053019R326 | Others | 0.722 | 6.00 |
| 11 | Kattur road (SRV nagar) | 053020R331 | Others | 0.065 | 5.50 |
| 12 | Sabapathy mill P.S.Garden 2 | 053026R400 | Others | 0.090 | 4.00 |
| 13 | Thirupathy nagar-1(subramaniya nagar) | 053026R415 | Others | 0.112 | 5.00 |
| 14 | Thirupathy nagar-1(subramaniya nagar) cross 1 | 053026R416 | Others | 0.032 | 5.00 |
| 15 | Thirupathy nagar 2 | 053026R417 | Others | 0.193 | 5.00 |
| 16 | Thirupathy nagar 3 | 053026R418 | Others | 0.095 | 6.00 |
| 17 | Thirupathy nagar 3 cross 1 | 053026R419 | Others | 0.036 | 4.90 |
| 18 | Thirupathy nagar 4 | 053026R420 | Others | 0.100 | 5.00 |
| 19 | Elaval babu layout | 053026R438 | Others | 0.555 | 5.00 |
| 20 | Thatan kuttai road east block | 053027R453 | Others | 0.310 | 4.50 |
| 21 | Thatan kuttai road east block(sivakumar hospital) | 053027R455 | Others | 0.130 | 5.95 |
| 22 | Thatan kuttai road east block(patta perumal kovil) | 053027R456 | Others | 0.270 | 5.40 |
| 23 | Thatan kuttai road east block(sugam hospital) | 053027R457 | Others | 0.114 | 5.20 |
| 24 | Sabapathy mill P.S.Garden 1 | 053026R399 | Others | 0.125 | 5.00 |
| 25 | Namakkal road-colony street cross 8 (UGD Lifting station) | 053018R294 | Others | 0.221 | 4.60 |

மேற்காணும் சாலைப் பணிகளின் அவசியம் கருதி, நகராட்சி நிதி நிலைமையினை கருத்தில் கொண்டு **ரூ.537.10** இலட்சம் மதிப்பீட்டிலான சாலைப்பணிகளுக்கு கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம் **2022–23–**இன்கீழ் முழு மான்யமாக நிதி ஒதுக்கீடு செய்து நிர்வாக அனுமதி ஆணை வழங்குமாறு நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களுக்கு திட்ட முன்மொழிவுகள் அனுப்ப நகர் மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று அனுப்பியதற்கு மன்ற அங்கீகாரம் வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**

நகர் மன்றத் தலைவர் முன் அனுமதி பெற்று திட்ட முன்மொழிவுகள் நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களுக்கு அனுப்பியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

(2923/22/இ1)

**தீர்மானம் எண். 148**

அங்கீகரிக்கப்பட்டது.

(7) நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களது தொலைபேசி கலந்துரையாடல் நாள் 12.08.2022–இல் தெரிவித்துள்ளவாறு, கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம் 2022–23– இன்கீழ் ரூ. 39.00 இலட்சத்திற்கு நகராட்சி வார்டு எண். 2, மின்சார வாரியம் காலனியில் உள்ள பூங்காவிற்கு ஒதுக்கப்பட்ட இடத்தில் பூங்கா மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ள நகர் மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு முன்மொழிவுகள் அனுப்பப்பட்டதற்கு மன்றத்தின் அங்கீகாரம் வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**

நகர் மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு முன்மொழிவுகள் அனுப்பப்பட்டதற்கு மன்றம் அங்கீகரிக்கலாம்.

(2924/22/இ1)

**தீர்மானம் எண். 149**

அங்கீகரிக்கப்பட்டது.

(8) இராசிபுரம் நகராட்சி வார்டு–பி, பிளாக்–10, நகரளவை எண். 15/9,10–இல் 2.06 ஏக்கர் பரப்பளவில் குடியிருப்பு மனைப்பிரிவிற்கு அனுமதி கோரி திரு கர்ணன் என்பவர் சமர்ப்பித்துள்ள விண்ணப்பத்தினை பரிசீலனை செய்து மாவட்ட நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், நாமக்கல் அவர்களின் கடித ந.க.எண். 151/2022, நாமா. நாள் 04.02.2022–இல் சாலைகள் உள்ளாட்சிக்கு ஒப்படைப்பு செய்தும் மற்றும் பொது ஒதுக்கீடு சாலை அமைப்பு வரைபடத்துடன் கடித வரைவு பெறப்பட்டுள்ளது. மேற்படி கடிதத்தில் தெரிவித்துள்ளவாறு அடிப்படை வசதிகளான தார்சாலை வசதிகள், குடிநீர் குழாய் வசதிகள், சாக்கடை வசதிகள், மின்கம்பம் வசதிகள் மற்றும் தெருவிளக்கு வசதிகள் அமைக்கப்பட்டுள்ளது என நகராட்சி பொறியாளரால் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், பொது உபயோகம் மின் பகிர்மானம் 25.90 ச.மீ. மற்றும் பொது ஒதுக்கீடு 25.90 ச.மீ. சாலை பரப்பு 3162.06 ச.மீ. பரப்பளவினை தான ஆவண எண். 1246/2022–இன் மூலம் இராசிபுரம் சார் பதிவாளர் அலுவலகத்தில் தானபத்திரம் முலமாக பதிவு செய்து ஒப்படைப்பு செய்துள்ளார். எனவே, மேற்படி மனைப்பிரிவு சாலைகள் மற்றும் பொது உபயோக ஒதுக்கீட்டினை ஏற்பது குறித்து மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது,

**அலுவலகக்குறிப்பு:**

மன்றம் அனுமதிக்கலாம்.

(1987/22/எப்1)

**தீர்மானம் எண். 150**

அனுமதிக்கப்பட்டது.

(9) தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனம் கோயமுத்தூர் நிறுவனத்திற்கான 2022–23–ஆம் ஆண்டு பங்குத் தொகை ரூ. 75000/– செலுத்த மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**

மன்றம் அனுமதிக்கலாம்.

(3008/22/சி1)

**தீர்மானம் எண். 151**

ஏற்க்கப்பட்டது.

**( 10 )** இராசிபுரம் நகராட்சியில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் **2021–22–** இன்கீழ் ரூ. **8.00** இலட்சம் மதிப்பீட்டில் இந்திரா காலனி பொதுக் கழிப்பிடத்தில் கூடுதலாக **6** இருக்கைகள் அமைக்கும் பணிக்கு இரண்டாம் அழைப்பாக **26.07.2022** அன்று பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் விவரங்கள் வருமாறு.

1) M/s. Sansiv Builders and Managements, 9C, Kattur Bye pass Road, Annamalai Nagar, Trichy – 620018 - மதிப்பீட்டைவிட **0.15%** குறைவு

2) Sri Bhavan Developers, 10/35A, First Floor, Balagandhi Road, Gugai, Salem – 6 - மதிப்பீட்டைவிட **0.24%** அதிகம்.

வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட **0.15%** குறைவான M/s. Sansiv Builders and Managements, Trichy அவர்களது ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**

மதிப்பீட்டைவிட **0.15%** குறைவான M/s. Sansiv Builders and Managements நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.

**(இ1/2298/2022)**

**தீர்மானம் எண். 152**

ஏற்க்கப்பட்டது.

**( 11 )** இராசிபுரம் நகராட்சியில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் **2021–22–** இன்கீழ் ரூ. **36.50** இலட்சம் மதிப்பீட்டில் வார்டு எண். **4** கிருஷ்ணன் தெருவில் சமுதாய கழிப்பிடம் கட்டும் பணிக்கு இரண்டாம் அழைப்பாக **26.07.2022** அன்று இணைய வழியில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் விவரங்கள் வருமாறு.

1) M/s. Sansiv Builders and Managements, 9C, Kattur Bye pass Road, Annamalai Nagar, Trichy – 620018 - மதிப்பீட்டைவிட **0.10%** குறைவு

2) Sri Bhavan Developers, 10/35A, First Floor, Balagandhi Road, Gugai, Salem – 6 - முன் வைப்புத் தொகை செலுத்தப்படாததால் நிராகரிக்கப்பட்டது.

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், ஒரு ஒப்பந்தப்புள்ளி, முன் வைப்புத் தொகை செலுத்தப்படாததால் நிராகரிக்கப்பட்டது. இத்திட்டப் பணிக்கு இரண்டாம் அழைப்பாக ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளதாலும், ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டு விலை விகிதத்தைவிட **0.10%** குறைவாக வழங்கியுள்ளதாலும் M/s. Sansiv Builders and Managements, Trichy - 18 நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**

திட்டப் பணிகளின் அவசியம் கருதி, ஒப்பந்தப்புள்ளி இரண்டாம் அழைப்பில் மதிப்பீட்டைவிட **0.10%** குறைவான M/s. Sansiv Builders and Managements, Trichy நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.

**(இ1/2298/2022)**

**தீர்மானம் எண். 153**

ஏற்க்கப்பட்டது.

( 12 ) இராசிபுரம் நகராட்சியில் 15.08.2022 அன்று 75–ஆவது சுதந்திர தினவிழா மிக சிறப்பாக நடத்த உள்ளதால் மேற்படி தினத்தில் நகராட்சி அலுவலகம் முழுவதும் அலங்கார விளக்கு அமைக்கவும், விழா சமயத்தில் ஒலிபெருக்கி அமைக்கவும், காந்தி சிலைக்கு வர்ணம் பூசி சிறப்பு செய்யவும் மற்றும் கொடி மரத்திற்கு வர்ணம் பூசவும் மதிப்பீடு தொகை ரூ. 9000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு :

மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று ஒப்படைப்பு பணியாக திருமதி சகிதாபானு, க/பெ. ரிஜ்வான், வி. நகர் ரோடு எண். 10, ஒப்பந்ததாரர் அவர்கள் மூலம் செய்ய அனுமதி வேண்டப்படுகிறது.

(2857/22/இ2 )

**தீர்மானம் எண். 154**

அனுமதிக்கப்பட்டது.

( 13 ) இராசிபுரம் நகராட்சிப் பகுதியில் கீழ்க்கண்ட வார்டுகளில் அமைந்துள்ள ஆழ்துளை கிணறு கைப்பம்புகள் 30 ஆண்டுகளுக்கு பழமையான 4 1/2 (இரும்பு குழாய்) கேசிங் பைப்பில் அமைக்கப்பட்டுள்ளதால் தற்போது துருப்பிடித்து மீண்டும் பைப் மேலே ஏற்றி பழுது சரிசெய்ய இயலாத நிலையிலுள்ளது.

1. வார்டு எண். 14 கன்னாரத்தெரு காமாட்சியம்மன் கோவில் அருகில்
2. வார்டு எண். 2 இ.பி. காலனியில் இரண்டு
3. வார்டு எண். 2 முத்துக்காளிப்பட்டி மின் மயானம்
4. வார்டு எண். 8 வி. நகர் ரோடு எண். 17
5. வார்டு எண். 26 காந்தி நகர் இரண்டு இடம்
6. வார்டு எண். 7 வி. நகர் ரோடு எண். 1 VKR வீடு பின்புறம்

மேற்க்கண்ட 8 இடங்களிலுள்ள ஆழ்துளை கிணற்றின் கைப்பம்புகள் அகற்றி எடுக்கவும், மேலும் அவற்றில் பயன்படுத்தக்கூடிய பொருட்கள் பயன்படுத்தவும் மீதியுள்ள பயன்படுத்த முடியாத பைப்புகள் பொது ஏலம் விடவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு :

மன்றம் அனுமதிக்கலாம்.

(1522/22/இ2)

**தீர்மானம் எண். 155**

அனுமதிக்கப்பட்டது.

( 14 ) இராசிபுரம் நகராட்சியில் மேற்கொள்ளப்படும் திட்டப் பணிகளின் விவரங்கள் தமிழ் முரசு சுதந்திரதின சிறப்பு தொழில் மலர் 2022–இல் வெளியிட்டதற்கான விளம்பரக் கட்டணம் ரூ. 7875.00 செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகின்றது.

அலுவலகக்குறிப்பு:

மன்றம் அனுமதிக்கலாம்.

(2662/2022/இ1)

**தீர்மானம் எண். 156**

அனுமதிக்கப்பட்டது.

(15) இராசிபுரம் நகராட்சிப் பகுதியிலுள்ள அனைத்து பெரிய சாக்கடைகள் மற்றும் மழைநீர் வடிகால்கள் மண் நிரம்பி உள்ளது. மேற்படி, மண்களை தூர் வாருவதற்கு JCB இயந்திரம் வாடகைக்கு, டிராக்டர் ஒன்று நாள் வாடகைக்கும், எடுத்து பயன்படுத்த வேண்டியுள்ளது. எனவே, சாக்கடைகளிலுள்ள மண்களை தூர் வாருவதற்கு JCB 300 மணி நேர வாடகைக்கும், டிராக்டர் தேவையான நாட்களுக்கு வாடகைக்கு வைத்துக் கொள்வதற்கும், உத்தேச செலவினம் ரூபாய் நான்கு லட்சத்திற்கும் ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை மேற்கொள்ளவும் நகர்மன்ற அனுமதிக்கு மன்றப்பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

அ) ஒப்பந்தப்புள்ளி கோரி JCB வாடகைக்கும், டிராக்டர் நாள் வாடகைக்கு எடுத்து சாக்கடைகளில் தூர் வாருவதற்கு நகர் மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) உத்தேச செலவினம் ரூ. 4.00 இலட்சம் நகராட்சி பொது நிதி (அல்லது) பேரிடர் மேலாண்மை நிதியிலிருந்து பணி மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

**(1222/22/எச்1)**

**தீர்மானம் எண். 157**

அனுமதி வழங்கப்பட்டது.

(16) இராசிபுரம் நகராட்சி பொது சுகாதாரப்பிரிவு, மக்கும் குப்பை அரைக்கும் பணிக்கு பயன்படுத்திக் கொண்டிருந்த SHREDDER MACHINE பழுதடைந்துவிட்டது. எனவே, மேற்படி, மெஷினிலுள்ள பழுதினை சரிபார்த்து பயன்பாட்டிற்கு கொண்டுவருவதற்குாகும் உத்தேச செலவினத் தொகை ரூ. 75,000/- நகர்மன்ற அனுமதிக்கு மன்றப்பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

மக்கும் குப்பை அரைக்கும் பணிக்கு பயன்படுத்திக்கொண்டிருந்த SHREDDER MACHINE பழுதடைந்துவிட்டது. எனவே, மேற்படி, மெஷினிலுள்ள பழுதினை சரிபார்த்து பயன்பாட்டிற்கு கொண்டுவருவதற்குாகும் உத்தேச செலவினத் தொகை ரூ. 75,000/- நகர்மன்ற அனுமதிக்கு மன்றப்பொருள் வைக்கப்படுகிறது.

**(1222/22/எச்1)**

**தீர்மானம் எண். 158**

அனுமதிக்கப்பட்டது.

(17) இராசிபுரம் நகராட்சி புதிய பேருந்து நிலையத்தில் பொது மக்கள் பயன்பாட்டிற்காக ரோட்டரி கிளப் ஆஃப் ராசிபுரம் (Rotary Club of Rasipuram) தன்னார்வ தொண்டு அமைப்பை சார்ந்த திரு என். பாலசுப்ரமணியன் என்பவர் ரோட்டரி கிளப் ஆஃப் ராசிபுரம் அமைப்பின் மூலம் குடிநீர் சுத்திகரிக்கும் இயந்திரம் (RO Plant) நிறுவி பொதுமக்களுக்கு இலவசமாக குடிநீர் வழங்க அனுமதி கோரியுள்ளார். நகராட்சி விதிமுறைகளுக்குட்பட்டு பராமரிப்பு செலவினை ரோட்டரி கிளப் ஆஃப் ராசிபுரம் அமைப்பின் மூலம் மேற்கொள்ள வேண்டி இப்பணிக்கு அனுமதி வழங்க மன்றத்திடம் வேண்டப்படுகின்றது.

**அலுவலகக் குறிப்பு :**

மன்றம் அனுமதிக்கலாம்.

**(3112/22/இ2)**

**தீர்மானம் எண். 159**

அனுமதிக்கப்பட்டது.

( 18 ) இராசிபுரம் நகராட்சியில் குடிநீர் விநியோகத்திற்காக பயன்படுத்தப்படும் சுலீஸ் வால்வுகளின் பழுதுகளை சரி செய்ய தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ. 9.50 இலட்சமாகும். குடிநீர் பணியின் அவசர அவசியம் கருதி இப்பணியினை 15–ஆவது நிதிக்குழு 2022–23–ஆம் திட்டத்தின்கீழ் மேற்க்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு முன்மொழிவுகள் அனுப்ப வேண்டியுள்ளது. நகர் மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று மேற்படி பணிக்கான முன்மொழிவுகள் அனுப்பப்பட்டதற்கும், ஒப்பந்தப்புள்ளிக் கோரி பணி மேற்க்கொள்ளவும் மன்றத்தின் அங்கீகாரம் வேண்டப்படுகின்றது.

**அலுவலகக்குறிப்பு :**

மன்றம் அங்கீகரிக்கலாம்.

**(3112/22/இ2)**

**தீர்மானம் எண். 160**

அங்கீகரிக்கப்பட்டது.

( 19 ) இராசிபுரம் நகராட்சியில் குடிநீர் விநியோகத்திற்காக பயன்படுத்தப்படும் சுலீஸ் வால்வுகளின் பழுதுகளை சரி செய்ய தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ. 9.35 இலட்சமாகும். குடிநீர் பணியின் அவசர அவசியம் கருதி இப்பணியினை 15–ஆவது நிதிக்குழு 2022–23–ஆம் திட்டத்தின்கீழ் மேற்க்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு முன்மொழிவுகள் அனுப்ப வேண்டியுள்ளது. நகர் மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று மேற்படி பணிக்கான முன்மொழிவுகள் அனுப்பப்பட்டதற்கும், ஒப்பந்தப்புள்ளிக் கோரி பணி மேற்க்கொள்ளவும் மன்றத்தின் அங்கீகாரம் வேண்டப்படுகின்றது.

**அலுவலகக்குறிப்பு :**

மன்றம் அங்கீகரிக்கலாம்.

**(3113/22/இ2)**

**தீர்மானம் எண். 161**

அங்கீகரிக்கப்பட்டது.

( 20 ) இராசிபுரம் நகராட்சியின் எல்லைக்குள் அமைந்துள்ள கோனேரிப்பட்டி ஏரியில் "Renovation Improvement Providing Treatment Plant And Forming Ecofriendly Earthen Island In Koneripatti Tank And Supply Channel In Rasipuram Taluk Of Namakkal District " - என்ற தலைப்பில் புனரமைத்தல் வேலை நடைபெறவுள்ளது. இதில் நீர் சுத்திகரிப்பு நிலையம் அமையவுள்ளது. அதன் கட்டுமான பணிகள் முடிவடைந்த பின் நீர் சுத்திகரிப்பு நிலையத்தின் பராமரிப்பு மற்றும் இயக்கத்தை நகராட்சி மூலம் பராமரித்து கொள்ளுமாறு பாசனப்பிரிவு, நீர் வளத்துறை அவர்களின் கடிதம் க.எண்/கோ.3/உபொ.இரா/ நாள் 12.07.2022–இல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நகராட்சிப் பகுதியிலுள்ள கழிவுநீர் கால்வாய் வழியாக கோனேரிப்பட்டி ஏரியில் கலப்பதால் நிலத்தடி நீர் மாசுபடுகிறது. எனவே, நிலத்தடி நீர் மாசுபடாமல் இருக்க அவ்வாறு கலக்கும் இடத்தில் பாசனப்பிரிவு, நீர் வளத்துறையின் மூலம் நீர் சுத்திகரிப்பு நிலையம் அமைத்து பணி முடிவடைந்த பின் அதன் பராமரிப்பு மற்றும் இயக்கத்தை இந்நகராட்சி மூலம் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

பாசனப்பிரிவு, நீர் வளத்துறையின் மூலம் நீர் சுத்திகரிப்பு நிலையம் அமைத்து பணி முடிவடைந்த பின் அதன் பராமரிப்பு மற்றும் இயக்கத்தை இந்நகராட்சி மூலம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**(2670/22/இ2)**

**தீர்மானம் எண். 162**

அனுமதிக்கப்பட்டது.

**( 21 )** இராசிபுரம் நகராட்சி **6.96** MLD கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தில் இணையவழி கண்காணிப்பு அமைப்பினை ஏற்படுத்தும் முறை (OCEMS) ரூ. **45.00** இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள **27.07.2022**–இல் வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளின் விவரங்கள் வருமாறு.

1) R.L. Technologies Pvt. Ltd., Chennai – மதிப்பீட்டைவிட **0.00%** குறைவு.
2) Swaraj Equipment Pvt. Ltd., Chennai – மதிப்பீட்டைவிட **1.33%** அதிகம்.

வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளில் R.L. Technologies Pvt. Ltd., Chennai நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி மற்ற ஒப்பந்ததாரரைவிட குறைவாகவும், மதிப்பீட்டு விலை விகிதத்திலும் வழங்கியுள்ளதால் R.L. Technologies Pvt. Ltd., நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று பணியினை மேற்க்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

மற்ற ஒப்பந்ததாரரைவிட குறைவாகவும் மதிப்பீட்டு விலை விகிதத்திலும் வழங்கியுள்ள R.L. Technologies Pvt. Ltd., நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று பணி மேற்க்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**(2241/2021/இ1)**

**தீர்மானம் எண். 163**

ஒத்தி வைக்கப்படுகிறது.

**( 22 )** நாமக்கல் மாவட்டம், இராசிபுரம் வட்டம், இராசிபுரம் நகராட்சி, வார்டு–பி, பிளாக் எண்.10, நகரளவை எண். **15/9, 10, 2.06** ஏக்கர் பரப்பளவில் அமையும் குடியிருப்பு மனைப்பிரிவிற்காக தொழில்நுட்ப அனுமதி மற்றும் வரைபட அனுமதி நாமக்கல் மாவட்ட நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் அவர்களின் ந.க.எண். **151/22/** நா.மா. நாள் **19.04.2022**–இல் மனுதாரர் திரு சி. கர்ணன், இராசிபுரம் என்பவர் மூலம் குடியிருப்பு மனைப்பிரிவுகள் அமைத்துக்கொள்ள தொழில்நுட்ப வரைபட அனுமதி கீழ்க்கண்டவாறு வழங்கப்பட்டுள்ளது.

1) மனையின் மொத்த பரப்பளவு **2.06** ஏக்கர் அல்லது **89,734** சதுரடி
2) வரைபட தொழில்நுட்ப அனுமதி ம.வ./ம.ஊ.ந.ம.எண். **74/2022**
3) கோரிய மனைகள்– **32**
4) ஒதுக்கிய மனைகள் – **32**
5) ஒதுக்க வேண்டிய பூங்காவிற்கான பரப்பு **5569.75** சதுரடி அல்லது **517.44** சதுரமீட்டர். (அரசாணை எண். **18**, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் **04.02.2019**–இன்படி அரசு வழிகாட்டி மதிப்பின்படி தொகை தலைப்பில் செலுத்தப்பட்டுள்ளது.

6) மனுதாரரால் உள்ளாட்சிக்கு தான பத்திரம் மூலம் ஒப்படைக்கப்பட்ட இட விவரம்

அ) மின் பகிர்மான இடம் – 313.75 சதுரடி அல்லது 29.15 சதுர மீட்டர்

ஆ) பொது உபயோகம் – 306.25 சதுரடி அல்லது 28.45 சதுர மீட்டர்.

இ) உத்தேச மனைப்பிரிவு சாலை – 34036.50 சதுரடி அல்லது 3162.06 சதுர மீட்டர்

மேற்க்கண்ட வ.எண். 6–இல் குறிப்பிட்டுள்ள இனங்கள் இராசிபுரம் சார் பதிவாளர் அலுவலக பத்திரம் எண். 1246/2022 நாள் 04.03.2022–இன்படி ஆணையாளர், இராசிபுரம் நகராட்சி அவர்களுக்கும் இனி அப்பதவி வகிப்பவர்களின் பெயருக்கும் பதிவு செய்யப்பட்டுள்ளது.

மேற்க்கண்ட தொழில்நுட்ப ஒப்புதலை தொடர்ந்து மனைப்பிரிவு நிபந்தனையில் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகள் அனைத்தும் சரியாக உள்ளதை நகராட்சிப் பொறியாளர் மற்றும் உதவிப் பொறியாளர் அவர்களால் நேராய்வு செய்யப்பட்டு அரசாணை விதிமுறைகளுக்குட்பட்டு சாலைகள், மழைநீர் வடிகால்கள், தெரு மின் விளக்கு வசதிகள், குடிநீர் பைப் குழாய்கள் போன்ற அனைத்து அடிப்படை வசதிகளும் திருப்திகரமாக உள்ளது என சான்று வழங்கப்பட்டுள்ளது. மேலும், நகரமைப்பு ஆய்வர் மேற்படி இடத்தை ஆய்வு செய்யப்பட்டு வரைபடத்தில் குறிப்பிட்டுள்ள மனைப்பிரிவுகள் அனைத்தும் முறையாக வேறுபாடின்றி உள்ளது என்றும் சாலை மற்றும் இதர பொது உபயோகத்திற்கு ஒதுக்கப்பட்ட இடங்களின் அளவீடுகள் அனைத்தும் முறையாக உள்ளது எனவும் சான்றளித்துள்ளார். மேற்க்கண்ட பொது உபயோக இடங்களை இக்கூட்டத்தில் பொருள் எண். 8–இல் மன்றம் ஏகமனதாக ஏற்றுக் கொண்டுள்ளது. எனவே, மேற்க்கண்ட ஆவணங்கள் மற்றும் கருத்துரைகளின் அடிப்படையில் மேற்க்கண்ட குடியிருப்புக்கான மனைப்பிரிவு குடியிருப்பிற்குண்டான கட்டணங்கள் வசூல் செய்து கொண்டு இறுதி மனைப்பிரிவு ஒப்புதல் வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

(எப்1/1987/22)

**தீர்மானம் எண். 164**

அனுமதிக்கப்பட்டது.

ஒம்/– இரா. முனைவர் கவிதா சங்கர்,
நகர் மன்றத் தலைவர்.

/ உண்மை நகல் /

ஆணையாளர்,
இராசிபுரம் நகராட்சி.